[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—GOVERNMENT BILL.

THE MADRAS CITY TENANTS' PROTECTION (AMENDMENT) BILL, 1959 (L.A. BILL NO. 26 OF 1959).

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I beg to present the Report of the Select Committee on the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1959 (L.A. Bill No. 26 of 1959)[a].

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1960-61—*cont.*

DEMAND XXV—LABOUR INCLUDING FACTORIES.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 30,61,700 under Demand XXV—Labour including Factories."

MR. SPEAKER: Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 30,61,700 under Demand XXV—Labour including Factories."

SRI S. PAKKIRISAMI PILLAI: Sir, I move the Cut Motion standing in my name, viz.—

"That the allotment of Rs. 30,61,700 under Demand XXV—Labour including Factories—be reduced by Rs. 100."

MR. SPEAKER: Motion moved—

"That the allotment of Rs. 30,61,700 under Demand XXV—Labour including Factories—be reduced by Rs. 100."

* THE HON. SRI R. VENKATARAMAN: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை சமர்பிக்கிறபோது 1959-60-ம் வருஷத்தில் தொழிலாளர்களுடைய இலாகா செயல்பட்டிருக்கிற விஷயங்கள் எல்லாவற்றையும் புத்தக ரூபமாக அச்சடித்துக் கனம் அங்கத்தினர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே அவைகளை விட இன்னும் அதிகமாக நான் குறிப்பிட்டுச் சொல்வதற்கு இல்லை. முக்கியமாக ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும்கூறவிரும்புகிறேன்.

(Sri M. Jagannathan in the Chair.)

1960–61-ம் வருஷத்தில் இந்த இலாகா திருத்தி அமைக்கப்படுகிறது. " பாக்டரிஸ் செக்ஷன் ''லேபர் செக்ஷன்'' என்று இரண்டு பிரிவாகப் பிரித்து பாக்டரி செக்ஷனில் 25 அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்களையும் லேபர் செக்ஷனில் 10 இன்ஸ்பெக்டர்களையும் போட்டு ஆக 35 இன்ஸ்பெக்டர்களை எல்லா பாக்டரிகளுக்கும் நியமிக்கப்போகிறோம். அவர்கள் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய பாக்டரிகளை மாத்திரம் தான் பரிசீலனை செய்வது, கண்காணிப்பது முதலியவைகளைச் செய்வார்கள். அவ்வாறு செய்கிறபோது ஒவ்வொரு இன்ஸ்பெக்டரும் சற்றேறக்குறைய 150 பாக்டரிகளை இன்ஸ்பெக்ஷன் செய்யும்படியான நிலைமை ஏற்படும். சர்வ தேசத்தொழிலாளர்கள் ஸ்தாபனத்தின் நியதிப்படி 140 பாக்டரிகளை இன்ஸ்பெக்ஷன் செய்வது தான் முறை என்று அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகவே சென்னை ராஜ்யத்தில் ஐ.எல்.ஓ. ஸ்தாபனப்படி பாக்டரி இன்ஸ்பெக்ஷன் 1960–61-ல் வந்து விடுகிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அச்சடித்துக் கொடுக்கப்பட்ட பிரசுரத்தை கனம் அங்கத்தினர்கள் பார்த்தால் அதில் ஆக்சிடெண்ட் எண்ணிக்கை அதிகரித்திருப்பதைப் பார்க்கலாம். அகில இந்தியாவில் இந்த ஆக்சிடெண்ட் இன்னும் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி டில்லியில் எல்லோரும் கூடி விவா

---

a Printed as Appendix III on pages 93-98 infra.